**O.S. No. 157/2024**
**Date : 13.03.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

PW 1 **திரு. பாண்டியராஜன்**

**குறுக்கு விசாரணை :**

1. நான் 10–ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன், விவசாயம் செய்து வருகிறேன். நான் தென்னந்தோப்பு, ஆடு, மாடு, கோழிகள் வைத்துள்ளேன். நான் குடியிருப்பது பிசி பட்டி. நிலங்கள் மார்க்கையன்கோட்டையில் அமைந்துள்ளது. பிரதிவாதி சின்னமனூரில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நானும், பிரதிவாதியும் உறவினர்கள் கிடையாது என்றால் சரிதான், பழக்கம்.

2. நானும், பிரதிவாதியும் கூட்டாக தொழில் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்கு மூலத்தில் எவ்வளவு நாட்களாக பிரதிவாதி எனக்கு பழக்கம், எந்த வகையில் பழக்கம் என்ற விபரத்தை விவரித்து சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மைத்துனர் மணிகண்டனுக்கு பிரதிவாதி குடியிருக்கும் ஊரில் உறவினர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு எப்படி பழக்கம் என்ற விபரத்தை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எப்படி பழக்கம் என்று நான் குறிப்பிட்டு சொல்லாமல் முகாந்திரத்திற்காக பழக்கம் என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3. பிரதிவாதி வேறு எந்த காசோலையும் எனது மைத்துனருக்கு எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் அவ்வாறு எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை. என்னிடம் பிரதிவாதி கொடுத்த காசோலை நிரப்பப்படாத காசோலை என்றால் சரியல்ல, முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு தேதியுடன் வழங்கப்பட்டது. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் எங்கு வைத்து காசோலை வழங்கப்பட்டது என்ற விவரத்தை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் வீட்டில் வைத்து பணம் வாங்கும் போது காசோலை கொடுக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் எனது தரப்பில் யார், யார் சாட்சிகள் இருந்தார்கள் என்ற விவரத்தையும் பிரதிவாதி தரப்பில் யார், யார் சாட்சிகளாக

இருந்தார்கள் என்ற விபரத்தையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மனைவி பெயர் சிவகாமி. எனது மனைவிக்கு பிரதிவாதி பணம் ஏதேனும் தர வேண்டுமா என்றால் அவருக்கு பணம் எதுவும் பிரதிவாதி தர வேண்டியதில்லை.

4. கடந்த 05.10.2017 ஆம் தேதியன்று எனது மனைவிக்கு பிரதிவாதி வரைவு காசோலை கொடுத்து அதை அவர் பணமாக்கி உள்ளார் என்றால் முன்னால் வாங்கிய பணத்திற்கு அவ்வாறு கொடுத்துள்ளார். இது சம்பந்தப்பட்ட விபரங்கள் எதையும் நான் தாக்கல் செய்த வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது மனைவி பி.சி பட்டியில் குடியிருந்து வருகிறார். சின்னமனூரில் குடியிருந்து வரும் பிரதிவாதியிடம் எனது மனைவி பணம் கொடுத்து வாங்கிய விபரம் எனக்கு முன்பே தெரியுமா என்றால் தெரியும். காசோலை எண். 725613 என்ற காசோலையை எனது மைத்துனர் அவரது வங்கி கணக்கில் போட்டு பணமாக்கி உள்ளார் என்றால் சரிதான். ஏற்கனவே நான் மைத்துனரிடம் பிரதிவாதி கடன் வாங்கியதற்கு அந்த காசோலை எடுக்கப்பட்டுள்ளது.

5. நான், எனது மைத்துனர் மற்றும் எனது மனைவி ஆகிய மூவரும் சேர்ந்து பிரதிவாதிக்கு ரூ.2 லட்சம் கடன் கொடுத்திருந்தோமென்றும், 05.10.2017 ம் தேதியன்று ரூ. ஒரு லட்சம் ரூபாய் எனது மனைவிக்கு பிரதிவாதி கடனை திருப்பி செலுத்தி விட்டார் என்றும், 02.05.2019 ஆம் தேதியன்று எனது மைத்துனருக்கு மணிகண்டனுக்கு ரூ.49,000/– பிரதிவாதி அந்த கடனுக்காக திருப்பி செலுத்தி விட்டார் என்றும், மீதி உள்ள ரூ.51 ஆயிரம் பிரதிவாதி தருவதற்கு தயாராக உள்ளார் என்றால் சரியல்ல, என்னிடம் வாங்கிய கடன் வேறு. இரண்டு மாதத்தில் கடனை திரும்பி செலுத்தி விடுவதாக சொல்லித்தான் பணத்தை வாங்கினார். மாதம் நூற்றுக்கு ஒரு ரூபாய் வட்டி விகிதம் பேசப்பட்டது.

6. எனது மைத்துனரும், மனைவியும் எவ்வளவு வட்டி வாங்கினார்கள் என்றால் அவர்களிடம் வாங்கிய கடனை அவர்கள் உடனே பெற்றுக் கொண்டார்கள். இந்த காசோலை தவிர வேறு எந்த ஆவணம் வாங்கப்பட்டுள்ளது என்றால் வத்திரா இருப்பிலுள்ள அவரது சொத்து சம்பந்தப்பட்ட ஆவணம்

ஒன்றை என்னிடம் கடனுக்கு ஆதரவாக கொடுத்துள்ளார். அவ்வாறு அந்த ஆவணம் வாங்கும் போது வேறு யார், யார் இருந்தார்கள் என்றால் மணிகண்டன் மூலமாக தான் எனக்கு பிரதிவாதியை தெரியும், எனவே மணிகண்டன், எனது மனைவி ஆகியோர்கள் பிரதிவாதி ஆவணத்தை கொடுக்கும்போது இருந்தார்கள்.

7. பிரதிவாதி என் மைத்துனரிடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்தி விட்டாரா என்றால் அவரிடம் கடனை திருப்பி செலுத்தி விட்டார், எனது பணம் மட்டுமே பாக்கியுள்ளது. காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தபோது காசோலையை திருப்பி செலுத்துமாறு திருப்பப்பட்டது என்றால் சரிதான். மற்றொரு காசோலை பணமில்லாமல் வந்த காரணத்தினால் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கடந்த 05.04.2024–ம் தேதியன்று பணம் கேட்டதாக நான் சொல்லியுள்ளேன். அன்றைய தேதியில் பணம் கேட்டபோது அன்றைய தேதியில் கொடுத்து விட்டேனா என்றால் ஏற்கனவே பணம் கேட்டிருந்தால் அன்றைய தேதியில் கொடுத்தேன்.

8. ஏற்கனவே எங்கு வைத்து எப்போது பணம் கேட்டார் என்ற விபரத்தை நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். ரூ.5,50,000/– ரொக்கமாக கொடுக்கப்பட்டதா அல்லது வங்கி பரிவர்த்தனை மூலம் கொடுக்கப்பட்டதா என்ற விபரத்தை நான் குறிப்பிட்டு எனது பிரமாண வாக்குமூலத்திலும், பிராதிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, ரொக்கமாகத்தான் பணம் கொடுத்தேன்.

9. எனக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு எப்படி வசதி வாய்ப்பு உள்ளது என்ற விபரத்தை நான் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஒரு ஒரு நிலம் விற்பனை செய்த வகையில் எனக்கு பணம் வந்திருந்தது அதைத்தான் நான் கடனாக கொடுத்தேன். அவ்வாறு ஐந்து லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்ததிலிருந்து அடுத்த 21 நாளில் மேற்கொண்டு ரூ.5 லட்சம் நான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

10. நான் நிலம் விற்பனை செய்தது தொடர்பான ஆவணங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் நான் முன்பணம் வாங்கி

இருந்தேன், அதன் பிறகு நான் நிலத்தை விற்று விட்டேன், அது சம்பந்தப்பட்ட ஆவணம் தாக்கல் செய்ய முடியும். அட்வான்ஸ் தொகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரிதான். அந்த தேதியில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள இரண்டு காசோலைகள் இன்றி மூன்றாவது காசோலை தான் இதனை தொடர்ந்து எனது மைத்துனர் தாக்கல் செய்து பணமாக்கி உள்ளார் என்றால் சரியல்ல, என்னிடம் பிரதிவாதி இந்த இரண்டு காசோலைகளைத் தான் கொடுத்தார்.

11. எனது மைத்துனர் மற்றும் எனது மனைவிக்கு கொடுத்த பணம் போக மீதி உள்ள வட்டி தொகைக்கு தான் நான் எனது மைத்துனரிடம் பிரதிவாதி கொடுத்து வைத்திருந்த காசோலையை வாங்கி இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வரவேண்டிய பணம் தொடர்பாக பிரதிவாதியின் சொத்தை ஜப்தி செய்ய வேண்டும் என்று நான் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை. உண்மையிலேயே பிரதிவாதி எனக்கு பணம் தர வேண்டி இருந்திருந்தால் பிரதிவாதியின் சொத்தை இடைக்காலமாக ஜப்தி செய்வதற்கு நான் நடவடிக்கை மேற்கொண்டு இருப்பேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பணம் எதுவும் பிரதிவாதி தர வேண்டியது இல்லை என்பதால்தான் முன் ஜப்தி நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.13 17:37:35 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.